**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| DVC.No. | : | 1/2023 |
| Deposition of Witness for | : | RW – 1 |
| Name and Age | : | மாரிமுத்து (வயது 37) |
| Father / Husband Name | : | கண்ணு |
| Occupation | : | விவசாயம் |
| Village | : | எம். சவுளூர் |
| Taluk | : | கிருஷ்ணகிரி |

**நாள்** – 20.02.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Petitioner present.**

**RW– 1**

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

மனுதாரர் எனது மனைவி என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2018ம் ஆணடு நடைபெற்றது. திருமணம் நிச்சயிக்கப்பட்டு மூன்றே நாட்களில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு என் குடும்பத்தார் மீது கொலைமிரட்டல் வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் என் மீது வழக்கு இல்லை எனது அண்ணன் மற்றும் தாயார் மீது வழக்கு இருந்தது. மேற்படி வழக்கு என்மீது இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி குற்றவழக்கை நிலுவையில் உள்ளதை மறைத்து நிச்சயிக்கப்பட்ட மூன்றே நாளில் திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது 20 சவரன் தங்க நகைகள் மற்றும் ஹோண்டா சைன் இருசக்கர வாகனம் பரிசாக கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்பு பாலக்கோடு, அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் திரும்பவும் பெற்றுக்கொண்டார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு வரதட்சனையாக கொடுத்த இருசக்கர வாகனத்தை மனுதாரரின் தம்பி எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். 20 பவுன் தங்க நகைகள் மற்றும் இருசக்கர வாகனம் பெற்றுக்கொண்டு தான் திருமணம் செய்தேன் என்றால் நான் கேட்கவில்லை மனுதாரர் பெற்றோர்கள் கொடுத்தார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் வரதட்சனை என்ற வார்த்தை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு நான் எங்கு வேலை செய்துகொண்டிருந்தேன் என்றால் சொடக்சோ நிறுவனத்தில் பெங்களுரில் வேலை செய்துக்கொண்டிருந்தேன். மேற்படி நிறுவனத்தில் வேலை செய்தபோது எனக்கு

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.20 18:00:46 +0530

மாத வருமானம் எவ்வளவு என்றால் ரூ.25,000/−ஆகும். திருமணத்திற்கு பின்பு நான் பெங்களூரில் வேலை செய்துக்கொண்டிருந்தேன் என்றாலும், என் மனைவி எனது அம்மா, அப்பா மற்றும் அண்ணனுடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். திருமணம் நிச்சயிக்கும்போது மனுதாரரை படிக்கவைப்பதாக ஆசை வார்த்தை கூறிதான் நிச்சயம் செய்தோம் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு மனுதாரரை B.Ed படிக்க மனுதாரரின் தந்தை ரூ.85,000/− பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல அதில் ரூ.35,000/− நான் கொடுத்தேன். எனது வழக்கின் பதில் உரையில் ரூ.85,000/− செலவு செய்து மனுதாரரை படிக்க வைத்தேன் என கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. அட்மிசன் போடும் சமயத்தில் நான் மனுதாரரை ஆபாச வார்தையில் திட்டி, அடித்தததில் மனுதாரர் மயக்கம் அடைந்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன்பிறகு மனுதாரர் காவேரிபட்டினம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் மனுதாரரை தாக்கியதில் மனுதாரர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றாலும் சரியல்ல. திருமணத்திற்கு திலகவதி என்ற பெண் வந்தார் என்றால் சரியல்ல, வரவேற்பிற்கு வந்தார். திலகவதி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். திலகவதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் நான் காஞ்சிபுரத்தில் காய்ச்சல் காரணமாக சிகிச்சையில் இருந்தபோது மேற்படி மருத்துவமனையில் செவிலியராக இருந்தார். நோய்வாய்பட்ட என்னை தாய் முறையில் கவனித்துக்கொண்டதால் பழக்கம். எனது பிரமாண வாக்கமூலத்தில் செவிலியர் திலகவதி திருமணத்திற்கு வந்தார் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் வரவேற்புக்கு வந்தார் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்யவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திருமணத்தின் போது திலகவதி என்ற பெண்ணுடன் போட்டோ எடுத்துக்கொண்டோம் என்றால் வரவேற்பில் போட்டோ எடுத்தேன். மேற்படி வரவேற்பில் திலகவதியை கட்டிபிடித்து தான் போட்டோ எடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி போட்டோ எடுதததுக்கொண்டதால் மனுதாரரை ஒதுக்கிவிட்டேன் என்றால் சரியல்ல அதனால் மனுதாரர் சண்டை போட்டு சடங்குகள் செய்யாமல் விலகிவிட்டார் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் போட்டோ எடுத்ததை மறுத்து சாட்சி அளித்துள்ளேனா என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே திலகவதியிடம் எனக்கு தவறான உறவை மறைத்து தான் மனுதாரரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல எதுவும் தவறான உறவு இல்லை. திருமணத்திற்கு பிறகு நான் பெங்களூரில் வேலையில் இருந்த சமயத்தில் எனது பூர்விக இடத்தில் வீடு கட்டினோமா என்றால் இல்லை திருமணத்திற்கு முன்பே கட்டிவிட்டோம். மேற்படி வீடு கட்டுவதற்காக மனுதாரரிடம் என் அண்ணன் பணம் கேட்டார் என்றால் சரியல்ல என்னிடம் தான் கேட்டார். வீடு கட்ட மொத்தம் 30 லட்சம் ஆனது அதில் எனது பங்கு ஆன 15 லட்சத்தை நான் கொடுத்தேன். நான் மாண்புமிகு குடும்ப நீதிமன்றம் கிருஷ்ணகிரியில் HMOP.No.180/2022 மனுதாரருடன் சேர்ந்து வாழ பரிகாரம்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.20 18:00:52 +0530

கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மாண்புமிகு குடும்ப நீதிமன்றம் கிருஷ்ணகிரியில் HMOP.No.180/2022 சான்றிட்ட உத்தரவின் நகல் என்றால் சரிதான். **மேற்படி சான்றிட்ட உத்தரவு நகல் பு.சா.ஆ.20–ஆக** குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உத்தரவில் நீதிபதியின் மேற்குறிப்பிட்டில் பத்தி 9–ல் எதிர்மனுதாரரை திருமணம் செய்தபிறகு எனது அண்ணன் எதிர்மனுதாரரிடம் ரூ.15,00,000/– வரதட்சணையாக கேட்டார் என நான் சாட்சி அளித்ததாக மேற்படி உத்தரவில் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதன் பின்தொடர்ச்சியாக வீட்டின் ஒரு பகுதி நீ வைத்துக்கொள் அதற்கு பதினைந்துலட்சம் கொடுங்கள் என்று என்னிடம் தான் கேட்டார் என நான் சாட்சியம் அளித்துள்ளேன். மேற்படி பணம் கொடுக்கவில்லை என 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.10 ஆவணத்தில் பணம் கேட்டு 2 முதல் 4 வரை உள்ள எதிர்மனுதாரர் அடித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி புகாருக்காக மனு ரசீது எண்.297/2019என வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனு ரசீதில் எதிர்மனுதாரர் தனது பெற்றோர் பேச்சை கேட்டு கொடுமைபடுத்துவதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. மேற்படி பணம் கொடுக்கவில்லை என 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் கொடுமைபடுத்தியதால் தான் நான் பெங்களூருக்கு மனுதாரரை தனிக்குடித்தனம் அழைத்துச்சென்றேன் என்றால் சரியல்ல. நானும், எனது மனைவியும் பெங்களூரில் இருந்த சமயத்தில் கைகலப்பு ஏற்பட்டது என்றால் கைகலப்பு ஏற்படவில்லை வாய்தகராறு ஏற்பட்டது. வாய்தகராறு ஏற்பட்ட சமயத்தில் நான் என் மனைவியை தாக்கினேன் என்றால் சரியல்ல. நான் தாக்கியபோது மனுதாரர் வீட்டை விட்டு வெளியே சென்ற சமயத்தில் அவர் துப்பட்டாவை பிடித்து இழுத்து கீழே தள்ளி தாக்கினேன் என்றால் சரியல்ல. அதன்பின்பு மனுதாரர் அவரது அப்பாவிற்கு போன் செய்து தகவல் சொல்லி அவர் பெங்களூர் வந்து மனுதாரரை அழைத்துச்சென்றால் என்றால் சரியல்ல. வாய்தகராறு சம்மந்தமாக நான் மனுதாரரின் தந்தைக்கு தகவல் சொல்ல அவர் தந்தை வந்து அழைத்துச்சென்றார். நான் தகவல் கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரரை அடித்து காயப்படுத்தியதால் தான் அவரது தந்தை வந்து அழைத்துச்சென்றார் என்றால் சரியல்ல. பின்னிட்டு பத்து நாட்கள் கழித்து மனுதாரர் பூச்சிமருந்து குடித்து சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான் அவரது பெற்றோர் வீட்டு குடும்ப பிரச்சனை காரணமாக மருந்து குடித்தார். அதன்பிறகு பெரியோர்கள் சமரசம் செய்து சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான். பின்னிட்டு நான் பெங்களூரில் இருக்கும் சமயத்தில் மனுதாரர் கருவுற்றிருந்தார் என்றால் சரிதான். மேற்படி திருமணத்தின் பயனாக எங்களுக்கு 12.05.2020–ம் தேதி ஜானுஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் மனுதாரரிடம் சேர்ந்து வாழ வேண்டி மேற்படி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.20 18:00:58 +0530

HMOP.No.133/2020 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பெங்களூரில் இருந்த சமயத்தில் ஏற்பட்ட பிரச்சனையை மறைக்கவே மேற்படி வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மனுதாரர் மகப்பேறுக்காக தனது பெற்றோர் வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல என்னிடம் சண்டைபோட்டுவிட்டு பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார். 19.02.2020ம் தேதி மனுதாரை அடித்து கொடுமைபடுத்தியதாக 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மீது கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்துள்ளார் என்றால் அளித்துள்ளார், ஆனால் நான் அடித்து கொடுமை செய்யவில்லை. மேற்படி புகாரிலும் பதினைந்து லட்சம் பணம் கேட்டு கொடுமை செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. புகாருக்கு பின்னிட்டு மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் என்னிடம் சொல்லாமல் சென்றுவிட்டார். 05.12.2021–ம் தேதி நான் மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு சென்றிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு சென்ற சமயத்தில் மனுதாரரின் கழுத்தை நெறித்து கொடுமை செய்ததாக மகேந்திரமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் நான் என் குழந்தையை பார்க்க சென்றிருந்தேன். அவ்வாறு எதுவும் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.16– புகைப்படத்தில் மனுதாரரின் தலைமுடியை பிடித்து இழுத்துக்கொண்டும் உள்ளேன் என்றால் சரியல்ல, நான் குழந்தையை கையில் வைத்திருந்தேன் மனுதாரர் குழந்தையை பிடுங்குவதற்காக எனது ஒரு கையை பிடித்து இழுத்துக்கொண்டிருந்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நான் குழந்தையை தொங்கவிட்டு செல்லும்போது எதிர்மனுதாரர் பிடித்து இழுத்தார் என்றால் சரியல்ல குழந்தையை தொங்கவிடவில்லை கையில் பிடித்துக்கொண்டு தான் இருந்தேன் என்றால் சரியல்ல. மனுதாரரை அடித்து குழந்தையை பிடுங்கி செல்லும்போது தான் புகைப்படம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் குழந்தையை பார்க்க சென்றேன் காண்பிக்க மறுத்தார்கள். குழந்தையை வலுக்கட்டாயமாக பிடுங்கி சென்றதற்காக மகேந்திரமங்கலம் காவல்நிலையம்தில் எனது மனைவி 05.12.2021ம் தேதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான் குழந்தையை பார்க்கசென்றேன் கொடுக்க மறுத்தார்கள். மேற்படி போலிசார் விசாரணைக்கு ஆஜரானேன். மேற்படி விசாரணையில் நான் குழந்தையை பார்க்க சென்று மனுதாரரை தொந்தரவு செய்யமாட்டேன் என மனு முடிக்கப்பட்டது என்றால் எங்களுக்கு அறிவுரை கூறி மனு குழந்தையை பார்க்க அனுமதிக்குமாறு அறிவுறுத்தி மனு முடிக்கப்பட்டது. HMOP.No.180/2022 நிலுவையில் உள்ள சமயத்தில் சுகஸ்ரீ என்ற பெண்ணை 28.06.2023–ம் தேதி திருமணம் செய்துக்கொண்டு கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆஜர் ஆனேன் என்றால் ஆஜர் ஆனேன் ஆனால் திருமணம் செய்துக்கொள்ளவில்லை. நான் மேற்படி பெண்ணை சென்னம்பட்டி முருகன் கோவிலில் திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. சுகஸ்ரீயின் பெற்றோருக்கும் மனுதாருக்கும் தகவல் கிடைத்து கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். நானும், சுகஸ்ரீயும் கிருஷ்ணகிரி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.20 18:01:05 +0530

காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆஜராகினோம் என்றாலும், அதை கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் விசாரிததார்கள் என்றாலும் சரியல்ல. முனியப்பன் தான் சுகஶ்ரீ என்ற பெண்ணுடன் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி 180/2022 என்ற வழக்கானது நான் இரண்டாவது திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் தள்ளுபடி ஆனது என்றால் சரியல்ல. நான் மனதாரரை பிரிந்து வந்த காலத்தில் இருந்து ஜீவனாம்சம் கொடுத்தேனா என்றால் இல்லை. 2021-ம் ஆண்டு 2493/2021 என்ற ஆவணத்தின் படி நான் சொத்து கிரையம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கிரைய பத்திரத்தில் உள்ள சொத்து எனது அண்ணன் எனக்கு கொடுத்த சொத்து ஆகும். மேற்படி ஆவணத்தின் படி இந்திராணி, மைதிலி என்பவர் எனக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். **மேற்படி கிரைய ஆவண எண்.2493/2021 பாலக்கோடு SRO பு.மா.சஆ.21**-குறியீடு செய்யப்படுகிறது. எனக்கும், எனது தந்தைக்கும் பூர்வீக சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து 6 1/2 ஏக்கர் உள்ளது என்றால் தவறு. எவ்வளவு ஏக்கர் உள்ளது என்றால் 2 ஏக்கர் எம்.சவுளர் கிராமத்தில் உள்ளது. அதற்கு பட்டா எண்.2156, 1912, 2133, 2024, 95 என்றால் மேற்படி சொத்துக்கள் என் தந்தையின் சகோதரர்களுடன் கூட்டாக உள்ளது. நான் கிரையம் பெற்ற நிலத்தில் கோழிப்பண்ணை மற்றும் காய்கறி விவசாயம் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. கோழிப்பண்ணை நடத்தவில்லை மாந்தோப்பு வைத்துள்ளேன். எனது குழந்தைகள் ஜானுஶ்ரீ, லித்திஸ் ஆகிய இருவரும் செயிண்ட் பால்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியில் படித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி குழந்தைகளை படிக்கவைக்க மனுதாரர் கடன் பெற்று சிரமப்படுகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. குழந்தைகள் பராமரிப்பு செலவை செலுத்த தயாராக உள்ளேனா என்றால் இல்லை, குழந்தையை என் வசம் இருந்தால் பராமரிக்க தயாராக உள்ளேன். முதல் குழந்தை ஜானுஶ்ரீக்கு தைராய்டு சிகிச்சை எடுத்துக்கொள்கிறார் என்றால் அதுபற்றி தகவல் தெரிவிக்கவில்லை, குழந்தைகளை என் வசம் கொடுத்தால் பராமரிக்க தயாராக உள்ளேன். குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாததது பற்றி வழக்கு மனுவில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பிரச்சனை தெரியவந்தபிறகும் மருத்துவசிகிச்சைக்காக பணம் உதவி செய்தேனா என்றால் கிருஷ்ணகிரி குடும்ப நீதிமன்றம் மூலமாக ரூ.85,000/- கொடுத்துள்ளேன். மேற்படி பணம் கொடுத்தது சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இன்றைய தேதி வரை எனது மனைவி மற்றும் குழந்தைகளுக்கு ஜீவனாம்சம் கொடுத்துளளேனா என்றால் மேற்படி 85,000/-தவிற கொடுக்கவில்லை. மனுதாரர் கோரியுள்ள ஜீவனாம்சம் கொடுக்க கட்டுபட்டுள்ளேன் என்றால் சரியல்ல குழந்தைகளுக்கு கொடுக்க தயாராக உள்ளேன். எனக்கு மாதம் ரூ.25,000/-ஜீவனாம்சம் கொடுக்க தகுதி உள்ளது என்றால் சரியல்ல. தற்போது கிருஷ்ணகிரி மருத்துவமனையில் எலக்ட்ரிசியனாக வேலை செய்து மாதம் ரூ.30,000/- வாங்குவதால் ஜீவனாம்சம் கொடுக்கும் தகுதி உள்ளது என்றால் மருத்துவமனையில் நான்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.20 18:01:12 +0530

தினகூலியாக வேலை செய்கிறேன். 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் முதல் பரிகாரத்தின் படி நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.02.20 18:01:18 +0530

Judicial Magistrate,
Palacode.